செ.வெ.எண்: 19/செப்டம்பர் நாள்: 09.09.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட நிர்வாகம் மற்றும் அழகப்பா பல்ககலைக்கழக பயில் வட்டம் சார்பாக "மாணவர்கள் திறன் ஊக்குவிப்பு பயிற்சி"

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (09.09.2017) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட நிர்வாகம் மற்றும் அழகப்பா பல்ககலைக்கழக பயில் வட்டம் ஒருங்கிணைந்து நடத்திய "மாணவர்கள் திறன் ஊக்குவிப்பு பயிற்சி"யினை துவக்கி வைத்தார்.

பயிற்சியினை துவக்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு அரசு மாணாக்கர்கள் நலனுக்காக பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகின்றது. அந்த வகையில் மாணவ மாணவியர்களின் தனித்திறமைகளை கண்டறிந்து அதனை வெளிக்கொண்டு வரும் வகையில் அழகப்பா பல்ககலைக்கழக பயில் வட்டம், மாவட்ட நிர்வாகத்துடன் ஒருங்கிணைந்து மாணவர்கள் திறன் ஊக்குவிப்பு பயிற்சி நடத்தப்படுகின்றது. இச்சிறப்பு பயிற்சியானது இன்று (09.09.2017) மற்றும் நாளை (10.09.2017) என இரண்டு நாட்கள் நடைபெறுகின்றது. இதில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள 13 கல்லூரிகளைச் சார்ந்த 150 மாணவ மாணவியர்கள்கலந்து கொண்டுள்ளனர்.

இப்பயிற்சி வகுப்பில் மாணாக்கர்களுக்கு தன்னம்பிக்கை மேம்பாடு, போட்டி தேர்வுகளை எதிர் கொள்ளுதல், தொழில் முனைவோராக உருவாதல், வாழ்க்கையில் இலக்குகளை நிர்ணயித்து அதனை நோக்கி முன்னேறுதல் உள்ளிட்ட பல்வேறு ஆக்கப்பூர்வமான விசயங்கள் குறித்து பயிற்சி வழங்கப்படுகின்றது. மாணவ மாணவியர்கள் தங்களுக்கு விருப்பமான துறைகளை தேர்வு செய்து, அந்த துறையில் தங்களது திறனை வளர்த்துக் கொண்டு தன்னம்பிக்கையுடன் செயலாற்றினால், எந்த துறையானாலும் அதில் உயர்ந்த நிலையை அடைய முடியும். மேலும் இப்பயிற்சி வகுப்பானது, 10 மாத காலத்திற்கு குறிப்பிட்ட தினங்களை தேர்வு செய்து தொடர்ந்து நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. மாணவ மாணவியர்கள் இப்பயிற்சி வகுப்பில் வழங்கப்படும் கருத்துகளை முழுவதுமாக கற்றறிந்து பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அழகப்பா பல்ககலைக்கழக பயில் வட்ட இயக்குநர் முனைவர்.சுரேஷ்குமார், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் திரு.ஜெயராமன், அழகப்பா பல்ககலைக்கழக பேராசிரியர் திரு.கே.குருநாதன், தனியார் நிறுவனங்களைச் சார்ந்த மேலாண்மை இயக்குநர்கள் திரு.எம்.சுப்பிரமணியன், திரு.துளசி பாலசுப்பிரமணியன், முனைவர்.எம்.ஆர்.டி.இராஜேந்திரன் உட்பட மாணவ மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,இராமநாதபுரம்.**

PRO/1